தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1969 மார்ச் 28

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Drinking evil in Railways.

* 511*Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Railway Administration has sought the assistance of the State Police to check drinking evil in Railways ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ரயில்களில் மது அருந்தும் தீமையைத் தடுக்கும்படி ரயில்வே நிர்வாகத்தினர் ரயில்வே காவல்துறையின் உதவியை எப்போதுமே நாடியதில்லை.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ப்ரோகிபிஷனை நாம் அமல் படுத்துவதினாலே, ரயில்கள் நம்முடைய மாநிலத்திலே போகிறபோது அந்த இடங்களிலே மது அருந்தக் கூடாதென்று யோசனை சொல்வதிலே என்ன தவறு இருக்கிறது ? வடக்கே எங்கெல்லாம் ஃபாஸ்ட் ரேஷனிங் இருக்கிறதோ அங்கெல்லாம் சோறு போடக்கூடாது என்ற விதி இருக்கிறது. அதேபோல் சாராயம் குடிக்கிற விஷயத்திலேயும் இதை அனுசரிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யோசனை சொல்வது மாத்திரம் அல்ல, நமது மாநிலத்திலே செல்கிற ரயில்களில் மது அருந்தும் பர்மிட் பெறாத நிலையில் இருந்தால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த மாநிலம் எத்தனையோ மடங்கு தேவலை என்று சொல்லலாம். வடநாட்டிலே போகக்கூடிய ரயில்வே பிளாட்பாரங்களில் பிராண்டி, விஸ்கி போன்றவைகளை பச்சையாக, பகிரங்கமாக அருந்துகிறார்கள். மத்திய சர்க்காரிடத்திலே, "முதலிலே நீங்கள் அங்கே கவனியுங்கள்" என்று சொல்கிற அளவிற்கு வற்புறுத்த நமது அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அங்கே இதை எடுத்துச் சொல்வது நல்லது.

திரு. பெ. மலைச்சாமி : ரயில்களில் அதிகமாகக் குடிக்கிறார்கள் என்று தெரிகிறது. நமது நாட்டில் 40 கோடி ரூபாய் வருமானம் போய்விடுகிற காரணத்தினால் இந்த மதுவிலக்கைத் தளர்த்துவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்காக திட்டம் ஒன்றும் கிடையாது.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS